தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 10, தாரண – திருவள்ளுவர் ஆண்டு 2036

2005 மார்ச் 23, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

*"பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல்"*

பெருமைக்கு ஏதுவான பண்பை இயற்கையாக உடையவர், பிறரால் செயற்கரிய நற்செயல்களை நெறிப்படி செய்து முடிப்பர்.

குறிப்பு : *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*

1. கவன ஈர்ப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு.*

2. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள்

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் கூட்டுறவுச் சங்கம்....*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, ஏற்கெனவே சொன்னீர்கள், என்னுடைய ஆய்வில் இருக்கிறது.*

1. கவன ஈர்ப்பு—*தொடர்ச்சி*

புதுக்கோட்டை, அருள்மிகு பிரகதாம்பாள் திருக்கோயில் குடமுழுக்கு – தேர்களை ஓடச் செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். டாக்டர் சி. விஜயபாஸ்கர்.*

2. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

திரு. மு.பெ. சாமிநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு ஒத்திவைப்புத் தீர்மானம், ஒரு கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எல்லாம் ஆய்வில் இருக்கிறது.*

1. கவன ஈர்ப்பு—*தொடர்ச்சி*

புதுக்கோட்டை, அருள்மிகு பிரகதாம்பாள் திருக்கோயில் குடமுழுக்கு – தேர்களை ஓடச் செய்தல்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *டாக்டர் சி. விஜயபாஸ்கர்.*

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை அருள்மிகு பிரகதாம்பாள் ஆலயத்திற்கு குடமுழுக்குச் செய்து, தேர்களை ஓட வைக்க வேண்டியதன் அவசியம் குறித்து மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விவர அறிக்கை இந்த அவையின்முன் வைக்கப்பட்டுள்ளது.*